# History of India from 1206 to 1707 A.D.

# Unit – IV

## Contents

1. Jahangir ........................................................................................................ 2

2. Shah Jahan ..................................................................................................... 7

3. Aurangazeb .................................................................................................... 12

4. Mughal Administration ..................................................................................... 16

# 1. Jahangir

**ஜஹாங்கீர் (JAHANGIR, 1605 - 1627)**

ஜஹாங்கீர் 1569-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30-ஆம் தேதி அக்பருக்கும் ரஜபுத்திர இளவரசியான மரியம் ஜமானாவுக்கும் (ஜோத்பாய்) மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சலீம். சலீமிற்கு முன்னர் பிறந்த குழந்தைகள் எல்லாம் இறந்து போகவே சலீமைத் தவமிருந்து பெற்ற குழந்தை என்று அழைப்பர். அக்பர், ஜஹாங்கீரை மிகச் சிறந்தவராக வளர்க்க வேண்டுமென்று பெரும் முயற்சி எடுத்தார். சலீமிற்கு முறையான கல்வியைப் புகட்டினார். சலீம் தனது 1585-ல் தனது பதினைந்தாம் வயதில் ராஜா பகவன் தாசின் மகளான மனுபாய் என்பவளைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களது மகனே குஸ்ரு ஆவர். ஆனால், தனது இருபத்தி எட்டாம் வயதிற்குள்ளாகச் சட்டப்படியாக மட்டும் இஇபது மனைவியரை மணந்திருந்தார். ஜஹாங்கீரின் வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அவரது சுயசரிதையும் அவரது அவைக்கு வந்த டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் எழுதி வைத்துள்ள குறிப்புகளும் உதவுகின்றன.

**ஜஹாங்கீர் பேரரசராகப் பதவி ஏற்றல்: 1605**

அக்பர் தனது மகன் சலீமை நல்ல முறையில் வளர்ப்பதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்த போதிலும், சலீம் தனது பருவத்துக்குரிய எல்லா கெட்ட பழக்க வழக்கங்களிலும் வாழ்ந்தார். காலப் போக்கில் அவர் மிகவும் ஒழுக்கம் குன்றியவராக மாறினார். மதுவில் மூழ்கி தன் சக்திகளை வீணாக்கினார். இந்துஸ்தானத்தின் சிம்மாசனத்திற்காக நீண்ட காலம் காத்திருந்து பொறுமை இழந்த சலீம் தனது தந்தைக்கெதிராகக் கிளர்ச்சியைத் துவக்கினார். 1549-ல் அக்பர் தக்காணப் படையெடுப்பை மேற்கொண்டிருந்தபோது அக்பருக்கெதிராகக் கிளர்ச்சி செய்து அலகாபாத்தைக் கைப்பற்றிக்கொண்டு தன்னைப் பேரரசராகப் பறை சாற்றினார். இதனை அறிந்த அக்பர் ஆக்ராவுக்கு விரைந்து வந்த தனது ஆரூயிர் நண்பரான அபுல்பாசலை ஆலோசனைக்காக அழைத்தார். ஆனால், இளவரசர் சலீமின் சதியால் அபுல்பாசல் கொல்லப்பட்டார். இதனை அறிந்த அக்பர் மிகவும் துயரமடைந்தார்.

1605 அக்டோபர் 17-ல் அக்பர் இறந்த பின்னர் நவம்பர் 3-ஆம் தேதி சலீம், நூர் உத்தீன் முகமது ஜஹாங்கீர் பாதுஷா காசி என்ற பெயருடன் பேரரசராகப் பட்டம் சூட்டிக் கொண்டார். ஜஹாங்கீர் என்றால் 'உலகத்தைக் காப்பவர்' என்று பொருள்படும். அரியணை ஏறும்பொழுது தாம் முஸ்லீம் மதத்தைக் காப்பாற்றுவதாகவும் குஸ்ருவின் ஆதரவாளர்களை மன்னிப்பேன் என்றும் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

**ஜஹாங்கீரின் ஆரம்ப கால நடவடிக்கைகள் :**

ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்ததும் தன்னை எதிர்த்தவர்களுக்கு பொது மன்னிப்பு அளித்தார். சிறைக் கைதிகளை விடுதலை செய்தார். தனது பெயரால் நாணயம் வெளியிட்டார். ஆக்ரா கோட்டையிலுள்ள ஷாகுர்ஜிக்கும் யமுனா நதிக்கரையில் நிறுவப்பட்டிருந்த ஒரு கற்றூணுக்கும் இடையே புகழ்ப் பெற்ற 60 மணிகளைக் கொண்ட நீதிச் சங்கிலி (Chain of Justice)யை நிறுவி ஏழை எளிய மக்களின் குறைகளைத் தீர்க்க ஏற்பாடு செய்தார்.

ஜஹாங்கீர் ஆட்சிக்கு வந்ததும் பன்னிரெண்டு ஆணைகளைப் (Twelve ordinences of Jahangir) பிறப்பித்து அவைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று ஆணையிட்டார். அந்த ஆணிைைகள் பின் வருமாறு:

1. பல சுங்க வரிகளும் வணிக வரிகளும் நீக்கப்பட்டன.
2. வழிப்பறி, கொள்ளை, திருட்டு ஆகியவைகளுக்குரிய தண்டனைகள் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டது.
3. இறந்து போனவர்களின் சொத்தை அவர்களது வாரிசு பெற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டது. வாரிசுகள் இல்லாது போனால் அச்சொத்துக்களை அரசு எடுத்துக் கொண்டு, அதிலிருந்து கிடைக்கும் வருவாயை மசூதி, சாலை, பாலங்கள், கிணறுகள் அமைப்பது போன்ற பொதுப் பணிகளுக்குச் செலவிடலாம்.
4. ஒயின் போன்ற போதை தரும் எல்லா மது வகைகளும் தடை செய்யப்பட்டன.
5. குற்றவாளிகளின் காதுகளும், மூக்கும் வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.
6. சொத்துக்களைப் பலவந்தமாகக் கைப்பற்றத் தடை விதிக்கப்பட்டது.
7. மருத்துவ விடுதிகள் கட்டவும், நோயாளிகளைக் கவனிப்பதற்கு மருத்துவர்களை நியமிக்கவும் ஆணையிடப்பட்டது.
8. குறிப்பிட்ட சில நாட்களில் விலங்குகள் கொல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.
9. அக்பரைப் போன்று ஞாயிற்றுக் கிழமை ஜஹாங்கீர் மதிப்பளித்து அன்று விலங்குகளைக் கொல்வதற்குத் தடை விதித்தார். .
10. ஜாகீர்களையும், மான்சப்களையும் வைத்திருக்கும் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன.
11. வழிபாட்டுக்குரிய நிலங்களை (ஜமால்) தர்ம நிலையங்களுக்கும், மத குருமார்களுக்கும் கொடுத்தார்.
12. கோட்டைகளிலும், பிற இடங்களிலும் இருந்த கைதிகளை மன்னித்து விடுதலை செய்தார்.

ஆட்சியில் உறுதியாகவும் நிலையாகவும் அமர எண்ணிய ஜஹாங்கீர் தனது ஆதரவாளர்களை ஒன்று திரட்டி தனக்கு ஆதரவான ஒரு குழுவை ஏற்படுத்திக்கொண்டார்.

**குஸ்ருவின் கிளர்ச்சி :**

ஜஹாங்கீரின் அமைதியான ஆட்சி அவரது மூத்த மகனான குஸ்ருவின் கிளர்ச்சியினால் சற்று குழப்பம் அடைந்தது. ஜஹாங்கீருக்கும் அவர் மகன் குஸ்ருவுக்கும் இடையே அக்பரின் ஆட்சிக் கால இறுதியிலிருந்தே அரியணை குறித்து பகைமை இருந்து வந்தது. புகழ்ப் பெற்றவராக விளங்கிய குஸ்ருவுக்கு அவரது தாய் மாமன் மான்சிங், மாமனாரும் அக்பரின் மாற்றாந்தாய் புதல்வருமான காளி ஆசம் அஸீஸ் கோக்கா போன்றவர்களின் ஆதரவும் இருந்து வந்தது.

ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்து ஐந்து மாதங்களுக்குப் பிறகு 1606-ல் ஆக்ராவை விட்டு பஞ்சாபிற்குச் சென்று அங்கு கலகம் விளைவித்தார். குஸ்ருவுக்கு ஐந்தாவது சீக்கிய மதகுரு அர்ஜுன் பேருதவி புரிந்தார். மகனை அடக்குவதற்காக ஜஹாங்கீர் ஒரு படையுடன் சென்று ஜலந்தருக்கு அருகே குஸ்ருவைத் தோற்கடித்தார். தோல்வியடைந்த குஸ்ரு காபூலுக்குத் தப்பிச் செல்வதற்கு சீனஸ் நதியைக் கடக்க முயற்சி செய்தபோது சிறைப் பிடிக்கப்பட்டார்.

குஸ்ருவுக்கு உதவி செய்தவர்கள் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர். 1607-ல் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சிக்கு குஸ்ரு காரணமாக இருந்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டதால் குஸ்ரு குருடாக்கப்பட்டார். அதன் பின் 1616-ல் இளவரசர் குர்ரம் (ஷாஜஹான்) பொறுப்பில் வைக்கப்பட்டார். குர்ரம் 1622-ல் குஸ்ருவை கொன்றுவிட்டு வயிற்று வலியினால் (colic) இறந்துவிட்டார் என்று பொய் கூறினார். அலகாபாத் அருகே குஸ்ரு அடக்கம் செய்யப்பட்டார்.

**சீக்கிய குரு அர்ஜுன் கொல்லப்படுதல்:**

கலகம் செய்த இளவரசர் குஸ்ருவுக்கு தாரன் தாரன் (Taran Taran) என்ற இடத்தில் அடைக்கலம் கொடுத்த ஐந்தாவது சீக்கிய குரு அர்ஜுன் பண உதவியும் செய்தார் என்பதற்காக குருவின் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்து கொண்டு அவருக்குத் தூக்குத் தண்டனை அளித்தார். பொதுமக்களால் மிகவும் மதிக்கப்பட்ட சீக்கிய மத குருவை மதமாற்றம் செய்ய முற்பட்டு அதில் தோல்வியடையவே அவரைக் கொல்ல ஆணையிட்டார் என்றும் சொல்லப்படுகிறது. சீக்கியரின் மத குருவைத் தூக்கிலிட்ட ஜஹாங்கீரின் செயல் அரசியல் விவேகமற்றச் செயலாகும். இதுவரை அமைதியை விரும்பும் மக்களாகவே இருந்த சீக்கியர்கள், இப்போது முகலாயப் பேரரசுக்கு எதிரிகளாக மாறிவிட்டனர். முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு இந்த சீக்கியர்களின் எழுச்சியும் பகைமையும் ஒரு காரணமாகும்.

**ஜஹாங்கீரின் படையெடுப்புகள்**

**உஸ்மான்கானை தோற்கடித்தல் (1612)**

வங்கதிதிலிருந்த ஆப்கானியர்கள் உஸ்மான்கள் தலைமையில் நடத்திய கிளர்ச்சியை 1612 - ல் ஜஹாங்கீர் தோற்கடித்து உஸ்மான்கானை கொலை செய்தார்.

**மேவார் படையெடுப்பு (1614)**

ருணா அமரசிங் மேவார் பகுதியை ஆட்சி செய்து வந்தார். இளவரசர் குர்ராம் தலைமையில் நடந்த போரில் ராணா அமர்சிங் அடிபணிந்தார். சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு ஜஹாங்கீரின் மேலாதிக்கத்தை ராணா அமர்சிங் ஏற்றுக் கொண்டார். மேவாரின் பகுதிகள் அனைத்தும் ராணா அமர்சிங்கிற்கே கொடுக்கப்பட்டன.

**தக்காண படையெடுப்புகள்**

**அகமது நகர் (1608 - 1617)**

தக்காண பகுதியில் இருக்கும் அகமது நகர் மீது 1608 - ல் முற்றுகையிடச் சென்ற முகலாயப்படை வெற்றி பெற முடியாமல் திரும்பியது. ஜஹாங்கீரின் மகன் குர்ரம் (ஷாஜஹான்) தலைமையில் நடைபெற்ற இரண்டாவது படையெடுப்பு 1617 - ல் நடைபெற்றது. இப்படையெடுப்பின் முடிவில் அகமது நகரை ஆண்டு வந்த மாலிக் ஆம்பர் அகமது நகர் முழுவதையும் மொகலாயருக்கு விட்டுக் கொடுக்க முன்வந்தார். குரரத்தின் இவ்வெற்றியை பாராட்டி மூன்று லட்ச ரூபாய் செலவு செய்து நடத்தப்பட்ட வெற்றி விழாவில் குர்ரத்திற்கு ஷாஜஹான் என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. மொகலாயப் படைகள் டில்லி திரும்பிய உடனே மாலிக் ஆம்பர் மீண்டும் தாம் இழந்த பகுதிகளை மொகலாயர்களிடமிருந்து கைப்பற்றினார்.

**காங்க்ராவை கைப்பற்றுதல் 1620**

120 -ல் பஞ்சாப்பின் வட கிழக்கில் அமைந்துள்ள காங்கரா கோட்டையை பதினான்கு மாத முற்றுகைக்கு பின் ஜஹாங்கீர் கைப்பற்றினார். இந்துக்களின் மனம் புண்படும் படி கோட்டையில் பசுவை பலியிட்டு குத்பா படிக்கச் செய்து அங்கு மசூதியையும் கட்டினார்.

**காந்தகாரை இழத்தல் (1622)**

பாரசீகர்களுக்கும் மொகலாயர்களுக்கும் காந்தகார் பற்றிய கருத்து வேறுபாடு இருந்தது. பாரசீக மன்னன் ஷாசுப்பாஸ் ஜஹாங்கீரின் நண்பர் போல் நடித்து காந்தகாரை 1622 - ல் கைப்பற்றினார். ஷாஜஹான் தலைமையில் படை அங்கு சென்றதால் வெற்றி பெறலாம் என்று நூர்ஜஹான் கூறினார். தூம் அங்கே சென்றதால் தனது மகன் ஷாரியர் ஆட்சியை கைப்பற்றி விடுவார் என்று எண்ணி ஜஹாங்கீர் காந்தகாரை மீட்க செல்லவில்லை. இவ்வாறு மொகலாயர் காந்தகாரை இழந்தனர்.

**ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு அனுமதி வழங்குதல்**

1600 - ல் இங்கிலாந்தில் துவக்கப்பட்ட ஆங்கில கிழக்கு இந்திய கம்பெனியை இந்தியாவில் சூரத் என்ற இடத்தில் தொடங்க அனுமதி கேட்டு வில்லியம் ஹாக்கின்ஸ் 1608 - ல் ஜஹாங்கீரின் அரண்மனைக்கு வந்தார். அனுமதி மறுக்கப்பட்டது. பின் சர் தாமஸ்ரோ 1615 - ல் ஜஹாங்கீர் அரண்மனைக்கு வந்து அனுமதி பெற்றார்.

**நாணயங்கள்**

மொகலாயர் காலத்து நாணயங்களில் மிகச் சிறந்தது ஜஹாங்கீர் காலத்து நாணயங்களே. நுணங்கள் வெள்ளியாலும், தங்கத்தாலும் செய்யப்பட்டவைகளாகும். ஐந்தாண்டு காலத்துக்கு நூர்ஜஹான் பெயரால் காசுகள் வழங்கினார். அவருடைய காசுகளில் ஒன்றில் பேரரசர் கையில் மதுக் கோப்பையோடு காணப்படும் காசு மிகவும் அருமையான ஒன்றாகும்.

**ஜஹாங்கீரின் சமயக் கொள்கை**

ஜஹாங்கீரின் சமயக் கொள்கையை திட்டவட்டமாக கூற இயலாது என்றாலும் சமயத் துறையில் பிற மதத்தினரை வெறுத்து, கீழ்தரமாக நடத்தினார். என்று சிலர் கூறிவர். ஊதாரணமாக சீக்கியர்களின் 5 - ம் குருவான குரு அர்ஜூனைக் கொலை செய்ததும் ொஅகமதாபத்தின் சமணத் தலைவரை நாடு கடத்தியதும் குறிப்பிடத்தக்கன. இவற்றைப் பற்றி ஆராயும் பொழுது இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற சமயத்துறையில் ஏற்பட்ட வெறுப்பு என்று முழுமையாக கூற முடியாது. ஆரசியல் காரணமும் உண்டு எனலாம். அதுபோல் காங்ரா கோட்டையை கைப்பற்றியதும், அதனுள்ளே ஒரு பெரும் மசூதியை கட்டி வெற்றி விழா கொண்டாடியதும் அவரது சமய வெறியை காட்டுகிறது. இருப்பினும் அவர் பொதுவாக அனைத்து சமயத்தினருக்கும் மத சுதந்திரம் அளித்தார் என்று வரலாற்று ஆசிரியர் L.A. ஸ்ரீவத்சவா கூறுகிறார். கிறிஸ்தவர்களுக்கு மத வழிபாட்டு சுதந்திரம் அளிக்கப்பட்டது.

**ஆட்சி முறை**

அக்பரின் முறையைப் பின்பற்றியே ஜஹாங்கீர் ஆட்சி நடத்தினார். ஆனால் அடிக்கடி அலுவலர்கள் மாற்றப்பட்டதன் காரணமாக நிர்வாகத்தில் திறமை குன்றியது. பேரரசரின் தக்காணப் படையெடுப்பின் காரணமாக அரசின் கருவூலம் வற்றியது. அரசு வருவாயைப் பெருக்குவதற்கு ஜஹாங்கீர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. கல்விக்கோ அல்லது பொதுப்பணிக்கோ அவர் எவ்விதச் செலவும் செய்யவில்லை. தன்னுடைய புகழுக்காகவும், அரசவையின் புகழுக்காகவுமே அதிக பணம் செலவு செய்யப்பட்டது. வெறியூட்டும் சில பொருட்களை விற்றலும் சூதாடுதலும் குற்றம் என்று சட்டம் தீட்டினார். சில இடங்களில் முகமதியர் உடன்கட்டை ஏறும் வழக்கத்தையும், பெண் குழந்தைகளைக் கொல்லும் பழக்கத்தையும் மேற்கொண்டிருந்ததால் அவை தடை செய்யப்பட்டன.

**இலக்கியமும், கலையும்**

ஜஹாங்கீர் ஒரு சிறந்த எழுத்தாளராக விளங்கினார். அவர் தனது வாழ்க்கை சரிதத்தை எழுதியுள்ளார். தவிர பாஹாங்கி ஜஹாங்கிரி என வழங்கி வந்த அகராதி ஒன்றை எழுதி முடிக்க அவர் தனது ஆதரவை அளித்தார். பாரசீக மொழி ஊக்குவிக்கப்பட்டது. ஜஹாங்கீர் காலத்தில் முகலாயர் ஓவியக்கலை உச்சகட்டத்தை அடைந்தது. அவரே ஓவியக்கலையில் திறமை பெற்றிருந்தார். ஆக்ரா அரண்மனைச் சுவர்களில் சில ஓவியங்களை அவரே தீட்டியுள்ளார். ஜஹாங்கீர் இசைக்கலைக்கு ஆதரவு அளித்தார். கலைஞர்களையும், கவிஞர்களையும் ஆதரித்தார். கட்டிடக்கலை வளர்ச்சியடைந்தது.

**நாணயங்கள்**

ஜஹாங்கீர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பொன், வெள்ளி நாணயங்கள் முகலாய நாணயங்கள் அனைத்திலும் மிக நேர்த்தியானவை. அக்பர் காலத்தில் நாணயங்களில் பொறிக்கப்பட்ட ஈரடிச் சொற்றொடரை தமது நாணயங்களிலும் வெளியிட்டார். மேலும் புதியவற்றையும் புகுத்தினார். ராசி மண்டலங்களின் அடையாளங்களை அவைகளுக்குரிய உருவங்களால் ஜஹாங்கீரின் சில நாணயங்களில் குறிக்கப்பட்டன. ஜஹாங்கீர் தனது வலது கையில் மதுக் கிண்ணத்தை வைத்துக் கொண்டிருப்பதைப் போன்ற உருவத்தை சில நாணயங்களில் காணலாம். ஜஹாங்கீரின் பெயர் குறிக்கப்பட்ட நாணயங்களும் வெளியிடப்பட்டன.

**ஜஹாங்கீரின் அவைக்கு அயல் நாட்டவர் வருகை**

1600ம் ஆண்டில் நிறுவப்பட்டிருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியார் வணிக சம்பந்தமான சலுகைகளைப் பெறுவதற்கு ஜஹாங்கீர் காலத்தில் முயற்சி செய்தனர். முதலாம் ஜேம்ஸ் மன்னர் எழுதி அனுப்பிய கடிதத்துடன் கேப்டன் வில்லியம் ஹாக்கின்ஸ் என்பவர் ஜஹாங்கீரின் அவைக்கு 1609-ம் ஆண்டு வந்து மூன்றாண்டு காலம் தங்கியிருந்தார். 1611ல் திரும்பி சென்றார். போர்ச்சுக்கீஸியரின் எதிர்ப்பால் எவ்விதச் சலுகையும் அவருக்குக் கிடைக்கவில்லை. அவரது குறிப்புகள் மூலம் ஜஹாங்கீரின் காலம் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

1615ம் ஆண்டு சர் தாமஸ் ரோ என்ற ஆங்கிலேயர் வருகை புரிந்தார். அவர் ஆங்கிலேயர்களுக்கு சில சலுகைகளை ஜஹாங்கிரீடம் பெற்றார். சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரேச் ஆகிய இடங்களில் ஆங்கில வாணிப நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. தாமஸ் ரோவுக்குப் பிறகு எட்வர்ட் டெரி என்ற ஆங்கிலேயரும், பெட்ரோ தெல வெலா என்ற இத்தாலியரும் முகலாயரின் அரசவைக்கு வருகை புரிந்தனர். இவர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புகளிலிருந்து முகலாய அரசைப் பற்றிய பல செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**ஜஹாங்கீரின் தன்மை**

ஜஹாங்கீரின் குண இயல்புகள் மற்றும் அவரது பண்புகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அவர் எழுதிய Tuzuki Jahangiri என்ற நினைவுக் குறிப்புகள் பெரிதும் பயன்படுகின்றன. இந்திய வரலாற்றில் ஜஹாங்கீர் ஒரு சிக்கல் நிறைந்த ஆட்சியாளராகவே தோன்றுகிறார். அவர் நல்லறிவும் திறமையும் பெற்றவராக இருந்தபோதிலும் அவரிடம் காணப்பட்ட மிதமிஞ்சிய குடிப்பழக்கம் அவரது நற்குணத்தையும், நற்பெயரையும் அழித்துவிட்டது. அவரது மன இயல்பு அடிக்கடி மாறும் தன்மை கொண்டது. சில சமயம் கொடூரமாக நடந்து கொண்டார். மற்ற சமயங்களில் தாராள குணமுடையவராகவும், இளகிய மனம் உடையவராகவும் காணப்படுவார்.

## 2. Shah Jahan

**ஷாஜஹான்**

ஷாஜஹான் 1592 - ல் ஜஹாங்கீருக்கு மூன்றாவது: மகனாக பிறந்தார். 1612 - ல் மும்தாஜ் மஹால் (அரண்மனையின் அணிகலன்) என்னும் புகழ்பெற்ற அர்ஜுமந்த் பானுபேகத்தை திருமணம் செய்து கொண்டார். அவர் 1628 - ல் தனது மாமன் ஆஸப்கானின் உதவியால் பேரரசரானார்.

**ஷாஜஹானின் படையெடுப்புகள்**

**பண்டல்கன்ட் பகுதி - 128**

பண்டல்கன்ட் பகுதியினர் ஜீஜார்சிங் தலைமையில் ஒன்று கூடி மொகலாய பேரரசுக்கு எதிராக கலகம் விளைவித்தனர். அதனை அடக்கும் பொருட்டு ஷாஜஹான் தனது படைத்தலைவர் மகாபத்கான் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். ஜீஜார்சிங் மொகலாயப் படைகளுக்கு அடிபணிந்து ஓர் உடன்பாடு செய்து கொண்டார். அதன் படி போர் இழப்பீடாக 15,000 ரூபாயும் தக்காண படையெடுப்பிற்கு உதவுவதாகவும் ஜீஜார்சிங் உடன்பட்டார். ஆனால் 1635 - ல் மீண்டும் குழப்பம் விளைவித்தார். ஷாஜஹானின் மகன் ஔரங்கசீப்பின் தலைமையில் சென்ற படை ஜீஜாரை தோற்கடித்து, அவரையும் அவரது மகன் விக்ரமஜித்தையும் கொலை செய்து, அவர்கள் இவருடைய தலைகளையும் ஷாஜஹானுக்கு அனுப்பினார். பண்டல் கண்டின் ஆட்சி பொறுப்பு ஜீஜாரின் உறவினர் தேவ்சிங்கிற்கு கொடுக்கப்பட்டது.

**கான்ஜஹான் லோடியின் கலகம் (1628 - 1630)**

கான்ஜஹான் லோடி என்ற ஆப்கானியத் தலைவன் ஜஹாங்கீரிடம் பணிபுரிந்தவன். குஜராத், தக்காண பகுதிகளில் ஆளுநராக இருந்தவன். தக்காணத்தில் பொறுப்பு ஏற்ற கான்ஜஹான் நூர்ஜஹானுடன் சேர்ந்து கொண்டு ஷாஜஹானுக்கு எதிராக வாரிசுரிமை போரில் ஈடுபட்டார் என்பதற்காக ஷாஜஹான் கான்ஜஹானை வெறுத்தார். ஷாஜஹான் ஆமர் பகுதிக்கு வருவதை அறிந்து பயந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். அப்போது தக்காணத்தில் மகாபத்கான் கிளர்ச்சியில் ஈடுபட்டார். ஷாஜஹான் அங்கு படையெடுப்பை மேற்கொண்டு குஜராத், பீஹார், தெலுங்கானா ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை ஒடுக்கினார்.

**போர்த்துக்கீசியர்களுடன் போர் (1631 - 1632)**

போர்த்துக்கீசியர்கள் வங்காளத்திலுள்ள ஹூக்ளி பகுதியில் வேரூன்றியிருந்தார்கள். வாரிசுரிமை போட்டியில் ஷாஜஹான் தனது தந்தையாருக்கு எதிராக கிளர்ச்சி செய்த போது போர்த்துக்கீசியர்கள் அவருக்கு உதவி செய்யாததால் ஷாஜஹான் ஏற்கனவே அவர்கள் மீது கோபம் கொண்டிருந்தார். இந்நேரத்தில் அடிமை வியாபாரத்தில் ஈடுபட்ட போர்த்துக்கீசியர்கள் மும்தாஜின் இரு அடிமைப் பெண்கள் சென்ற படகுகளை கவிழ்த்ததோடு, அந்த இரு அடிமைகளையும் கொண்டு சென்று விட்டனர். இதனால் கோபம் கொண்ட ஷாஜஹான் வங்காள ஆளுநரான காசிம்கானுக்கு ஒரு ஆணை பிறப்பித்தார்.

அதன்படி காசிம்கான் போர்த்துக்கீசியர்களை நீரிலும், நிலத்திலும் தாக்கி 400 பேர்கள் கைதிகளாக்கப்பட்டு ஆக்ராவிற்கு அனுப்பினார். இதில் 3000 போர்த்துக்கீசியர்கள் தப்பி ஓடிவிட்டனர். கைது செய்யப்பட்ட 400 பேர்களும் இஸ்லாம் மதத்தைத் தழுவும் படி வற்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் மறுக்கவே சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

**ஷாஜஹானின் தக்காண கொள்கை**

**அகமது நகர் மீது படையெடுப்பு (1633)**

இதுநாள் வரை அகமது நகரை தீரத்துடன் பாதுகாத்து வந்த மாலிக்காபூர் இறந்ததும் அவருடைய மகன் பதேகான் அகமது நகர் மந்திரியானார். அகமது நகரின் சுல்தானாக நைசாமுதீன் இருந்து வந்தார். மொகலாயரின் தூண்டுதல் பேரில் பதேகான் சுல்தான் நைசாமுதீனை கொலை செய்து விட்டு அவரது பத்து வயது மகனான ஹுசைன்ஷாவை ஆட்சியில் அமர்த்தி, அதிகாரத்தை தன்வசம் வைத்துக் கொண்டார். தௌலதாபாத் நகரை கைப்பற்ற பிஜப்பூர் சுல்தானிடம் பணியாற்றிய ஷாஜிபான்ஸ்லே முடிவு செய்தார். இதனை மொகலாயர்கள் விரும்பவில்லை. இதனால் மொகலாயர்கள் பிஜப்பூரை எதிர்த்து போரிட்டு வெற்றிப் பெற்றனர்.

**கோல்கொண்டாவின் பணிவு**

மொகலாயருக்கு எதிராக செயல்பட்ட கோல்கொண்டா மீது போர்தொடுக்க ஷாஜஹானுக்கு பெரும்படையுடன் புறப்பட்டார். பிஜப்பூரை சார்ந்த ஷாஜிபான்லேவுக்கு அளித்து வரும் உதவியை நிறுத்த வேண்டும் என்றும் அகமது நகர் விசயத்தில் தலையிடக் கூடாது என்றும் கூறி கடிதம் ஒன்றை கோல்கொண்டாவிற்கு ஷாஜஹான் அனுப்பினார். இதை மறுக்கவே மொகலாயர் படை ஷாஜஹானின் மகன் ஔரங்கசீப்பின் தலைமையில்

கோல்கொண்டா நோக்கிச் சென்றது. ஔரங்கசீப்பின் படைவலிமையை அறிந்து 1 கோடி ரூபாய் கப்பம் செலுத்தவும் மொகலாய பேரரசின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளவும் கோல்கொண்டா முடிவு செய்தது.

**பிஜப்பூர் அரசுடன் போர்**

மொகலாயரின் அச்சுறுத்தலுக்கு இதுவரை பணியாத பிஜப்பூர் மன்னன் அடில்ஷா மொலாய படைகளை எதிர்த்தார். வலிமை மிக்க மொகலாயப் படைகள் பிஜப்பூர் பகுதியை சூழ்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்களை கொன்று குவித்தது. அடில்ஷா பணிந்து ஒவ்வொரு ஆண்டும் ஷாஜஹானுக்கு 20இலட்சம் கப்பம் கட்ட இணங்கினார். 18 வயதான ஔரங்கசீப்பை மொகலாயருக்கு சொந்தமான தக்காண பகுதியில் ஆளுநராக நியமித்தார்.

**மீண்டும் பிஜப்பூருடன் போர்**

1636 முதல் 1656 வரை மொகலாயருடன் நல்லுறவு கொண்டு அடில்ஷா செயல்பட்டார். 1656 - ல் அடில்ஷா மறைந்தார். அவரைப் பின்பற்றி இரண்டாம் அடில்ஷா ஆட்சிக்கு வந்தார். அவர் உண்மையான மகன் அல்ல என்று குழப்பம் நிலவியது. அதனை பயன்படுத்தி பீரார் கோட்டையை ஔரங்கசீப் 27 நாட்கள் முற்றுகையிட்டு கைப்பற்றினார். பின்னர் குல்பர்க்கா, கல்யாண் நகர் ஆகியவற்றை பேரரசுடன் இணைத்துக் கொண்டார். சுல்தான் மொகலாயரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு ஒரு கோடி ரூபாய் நஷ்ட ஈடு தர இணங்கினார்.

**ஷாஜஹானின் மத்திய ஆசியக் கொள்கை**

தனது மூதாதையருக்கு சொந்தமான (பாபருக்கு) சமர்கண்டு டிரான்ஸ் - சாக்சானியா போன்ற மத்திய ஆசிய பகுதிகளை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்பது ஷாஜஹானின் பேராவலாக இருந்தது. தக்க தருணமும் வந்தது. மத்திய ஆசியாவில் ஆட்சி செய்த இமாம் குலியை நீக்கிவிட்டு அவரது சகோதரர் நாசிர்முகமது ஆட்சியை கைப்பற்றினார். இதனால் நாட்டில் பெரும் கலகம் ஏற்பட்டது. குவாரிசம் என்ற இடத்தில் ஏற்பட்ட பெரும் கலவரத்தை அடக்க நாசிர் முகமது தனது மகன் அப்துல் அஜூஸை அனுப்பினார். ஆனால் அப்துல் அஜூஸ் தன்னை மன்னர் என பிரகடனப்படுத்தி கலகக்காரர்களுடன் ஆட்சி புரிய ஆரம்பித்தார். இதனால் நாசிர் முகமது பாலக் பகுதிகளுக்கு தப்பி ஓடினார். தும்முன்னோருக்கு சொந்தமான சமர்கண்ட், பால்க், டிரான்ஸ் - சாக்சானியா ஆகிய இடங்களை கைப்பற்ற ஷாஜஹான் இத்தருணத்தை பயன்படுத்தினார்.

**பாலக் படையெடுப்பு - 1646**

தனது மகன் அப்துல் ஆஜூசினால் விரட்டப்பட்ட நாசிர்முகமது ஷாஜஹானின் உதவியை நாடினார். அவருக்கு உதவுவது போல் நடித்து ஒரு பெரும்படையை தன்னுடைய மகன் மூரத் தலைமையில் ஷாஜஹான் பாலக் பகுதிக்கு அனுப்பினார். மூரத்தின் வருகை பாரசீகத்தில் பெரும் அச்சம் ஏற்படுத்தியது. நாரின், குவாண்டஸ் ஆகியவற்றை கைப்பற்றிய மொகலாய படைகள் பால்க் பகுதியை எளிதாக கைப்பற்றி பெரும் பொருளை சைவசமாக்கின. பின்னர் திர்மிங் என்ற இடத்தை மூரத் கைப்பற்றி விட்டு டெல்லி திரும்பினார். பின்னர் ஔரங்கசீப் தலைமையில் மற்றொரு படையெடுப்பு நடந்தது. இறுதியில் அஜூஸ்கான் தோற்கடிக்கப்பட்டார். நாசிர் முகமதுவின் பேரனுக்கு அக்கோட்டையும், நகரமும்

கொடுக்கப்பட்டன. பாலக் பகுதியிலிருந்து காபூலுக்கு ஔரங்கசீப் திரும்பும் பொழுது ஔரங்கசீப்பின் படைகளில் சுமார் 2000 - க்கும் மேற்பட்ட வீரர்கள் பனியால் மூடப்பட்டு இறந்தனர்.

**விளைவுகள்**

பாலக் படையெடுப்பு மொகலாயருக்கு ஒரு சோதனை காலம் என்று சொல்லலாம். மோகலாயப் படை திட்டமிட்டு போர் செய்யாமைக்கு ஒரு சவுக்கடி என்றும் கூறலாம். ஷாஜஹானின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு மரண அடியாக அமைந்தது. கோடிக்கணக்கான ரூபாண் செலவான போதும் மொகலாயாகளுக்கு ஒரு சிறு பகுதி கூட கிடைக்கவில்லை. பனியால் மூடி 2000 - க்கும் மேற்பட்ட வீரர்கள் இறந்தது மொகலாயருக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

**சமயக் கொள்கைகள்**

பொதுவாக ஷாஜஹான் தீவிர முஸ்லீம் மதப் பற்றுடையவராக இருந்தாலும் ஒரு சில நேரங்களில் இந்துக்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்டார். இந்துக்கள் மீது யாத்திரை வரி போடப்பட்டது. புதியதாக கட்டப்பட்ட இந்து கோயில்கள் இடிக்கப்பட்டன. காசி மாவட்டத்தில் மட்டும் சுமார் 74 ஆலயங்கள் இடிக்கப்பட்டன. முஸ்லீம் கல்லறை அருகே இந்துக்களின் பிணம் எரிப்பது தடுக்கப்பட்டது. இந்து - முஸ்லீம் திருமணம் தடை செய்யப்பட்டது. முஸ்லீம் பெண்களை திருமணம் செய்யும் இந்துக்கள் உடனடியாக முஸ்லீம் சமுதாயத்தில் சேரவேண்டும் அல்லது அப்பெண்கள் கணவரை விட்டுவிட்டு தனியே வரவேண்டும் என்றார். சீக்கியர்களையும் இந்துக்களையும் கொடுமைப்படுத்தினார். அதனை எதிர்த்து ஹரி கோவிந்த் சிங் ஷாஜஹானுடன் போர்புரிய வேண்டியதாயிற்று. கிறித்தவ சமய வளர்ச்சிக்கும் தடை செய்யப்பட்டது. போர்ச்சுகீசியரின் சமயப் பிரச்சாரத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இவ்வளவு முஸ்லீம் பற்றுடைய ஷாஜஹானிடம் சமயப் பொறை காணப்படவில்லை என்று கூறமுடியதாது. இந்துக்களின தசராவிழா, வசந்த விழா ஆகிய விழாக்கள் கொண்டாட அனுமதி வழங்கியதோடு, தாமும் கலந்து கொண்டார். இந்துக்கள் வாழும் பகுதியில் பசுவதையைத் தடைச் செய்தார்.

**ஷாஜஹான் காலம் ஒரு பொற்காலம்**

1627 முதல் 1656 வரை ஆட்சி செய்த ஷாஜஹானின் மொகலாயப் பேரரசு கலைத்துறையில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இக்கால கட்டத்தில் மக்கள் அமைதியாக வாழ்ந்தனர். கல்வியும், இலக்கியமும் மேன்மையுற்றன. படையெடுப்புகள் பெருமளவில் நடைபெற்றன. அயல்நாட்டு வியாபாரம் சிறந்து விளங்கியது. அதனால் ஷாஜஹானின் ஆட்சிக் காலம் பொற்காலம் என அழைக்கப்படுகிறது.

**ஆட்சிமுறை**

அரசர் தனது நாட்டை 22 மாநிலமாக பிரித்து இருந்தார். மாநிலங்கள் முறையாகவும், சீராகவும் ஆட்சி செய்யப்பட்டன. திறமைமிக்க அமைச்சர்கள் மாகாண அரசு சிறப்புற அமைய உதவி புரிந்தனர்.

**நிதித்துறை**

நிதி நிலை மிகவும் திருப்திகரமாக இருந்தது. நிலத்திலிருந்து கிடைத்த வருமானம் மட்டும் 21 கோடி ரூபாயாக இருந்தது. கிராமங்களிலிருந்தும் அதிக வருமானம் கிடைத்தது. அதிகாதிகள் முறையாகவும், தவறு செய்யாமலும் வரி வசூல் செய்ததால் இத்தகைய வருமான உயர்வுக்கு காரணமாக இருந்தது.

**இலக்கிய வளர்ச்சி**

ஷாஜஹான் ஒரு இலக்கியவாதி. ஆதனால் இலக்கியக் கலை வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்தார். அப்துல் ஹமீதுலகோரி, ஹஸ்வானி , மீர்அப்துல் காசிம், இராணி போன்ற இலக்கிய வாதிகள் இவரது அவையை அலங்கரித்தனர். சுந்தர்தாஸ், சிந்தாமணி, கவீந்திர ஆச்சார்யா, ஐகநாத் போன்ற இந்து சமயத்தைச் சார்ந்த இலக்கியவாதிகளும் ஊக்குவிக்கப்பட்டனர். அப்துல் ஹமீது லாகோரி என்பவர் பாதுஷா நாமா என்ற் நூலையும் எழுதினார்கள். இனாயத்கான் என்பவர் ஷாஜஹான் நாமாவையும் எழுதினார்கள். ஜெகநாத் என்ற கவிஞருக்கு மாகாகவிராயர் என்ற பட்டம் சூட்டிச் சிறப்பித்தார். மகாகவிராயர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற சுந்தரதாஸ் ஷாஜஹானின் அந்தரங்க ஆலோசராக இருந்தார்.

**கட்டிடக்கலை**

ஷாஜஹான் காலத்தில் கட்டிட கலையில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. தனது மனைவி மும்தாஜின் ஞாபகார்த்தமாக பளிங்கு கற்களால் கட்டப்பட்ட தாஜ்மஹால் உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இது கட்டுவதற்கு மூன்று கோடி ரூபாய் அப்பொழுது செலவானது. 20,000 - க்கு அதிகமானோர் வேலை செய்தனர். தாஜ்மஹாலை கட்டுவதற்கு உலகின் பல பகுதிகளிலிருந்தும் கட்டிடக்கலை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். இந்தியாவிலேயே பெரிய மசூதியான ஜும்மா மசூதி , முத்து மசூதி, டெல்லி செங்கோட்டை, திவானி ஆம், திவானி காஸ் போன்ற கட்டிடங்களும் கட்டப்பட்டது. மண்ணிலே காணப்படும் விண்ணுலகம் என்ற ஒரு பாரசீக கல்வெட்டு திவானி ஆமில் காண்ப்படுகிறது. கூறுகிறது. பூமியில் ஒரு சொர்க்கம் உண்டென்றால் அது இது! அது இது!! என்று ஒரு இளமையான பாரசீக காதல் ஜோடி கூறுவது போன்று ஓவியம் அதனுள் தீட்டப்பட்டுள்ளது. கோகினுனூர் வைரத்தால் செய்யப்பட்ட மயிலாசனம் உலகப் புகழ் பெற்றதாகும். கட்டிடக் கலைஞர்களின் இளவரசன் என்று ஷாஜஹான் அழைக்கப்பட்டார்.

**இசைக்கலை**

ஷாஜஹான் இசைக் கலைக்கு ஊக்கம் கொடுத்தார். இசைக் கலைஞர்களுக்கு பட்டப் பெயர்களும் சூட்டி சிறப்பித்தார். அவர்களால் சுக்சென் எனும் கிடார் வாத்திய கலைஞரும் அவரது அவைக்களத்தை அலங்கரித்தார்

**சோதிட நம்பிக்கை**

ஷாஜஹான் சோதிடத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். அரச குடும்பத்திற்கு ஜாதகங்கள் எழுதவும், திருமணங்கள், படையெடுப்புகள் மற்றும் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கான சுபலக்னங்களை குறிப்பிடவும் பல இந்து சோதிடர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**நீதி**

நீதித்துறை முறையாக செயல்பட்டது. நீதி வழங்குவதில் மன்னரே தனிகவனம் செலுத்தினார். தவறு செய்யும் அரசின் அதிகாரிகள் உடனுக்குடன் தண்டிக்கப்பட்டார்கள். பிறரை துன்புறுத்தியவர்களையும் தண்டித்தார்.

**சமூக உதவி**

1641 - ல் காஷ்மீரிலும் 1646 - ல் பஞ்சாபிலும் அதிக மழை காரணமாக மக்கள் அல்லலுற்றனர். அதற்கு ஷாஜஹான் பெருமுயற்சி எடுத்து மக்களுக்குப் பணமும், உணவும் வழங்க ஏற்பாடு செய்தார். பல கஞ்சி தொட்டிகள் திறக்கப்பட்டன. 50,000 ரூபாய் பண உதவி கொடுக்கப்பட்டது. மக்களை கவனிக்காத அலுவலர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். ஷாஜஹானிடம் மத சகிப்புத் தன்மை காணப்படவில்லை என்று கூற முடியாது. இந்துக்களின் தசரா விழா , வசந்த விழா ஆகிய விழாக்கள் கொண்டாட அனுமதி கொடுத்ததோடு தாமும் கலந்து கொண்டார். இந்துக்களின் வாழும் பகுதியில் பசுவதையை தடைச் செய்தார்.

ஷாஜஹானின் காலம் கலை வளர்ச்சியின் பொற்காலமாக கருதப்படுகின்றது தனது மனைவியின் ஞாபகச் சின்னமாக எழுதப்பட்ட தாஜ்மஹால் உலக அதிசியங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இவரது வெற்றிகளும், நிர்வாகமும் மொகலாய பேரரசை மென்மேலும் வளர்ச்சியடைவதற்கு உறுதுணையாக இருந்தது எனலாம்.

## 3. Aurangazeb

**ஔரங்கசீப்**

ஔரங்கசீப் எளிமையானவர், பகம்டை விரும்பாதவர், சட்டத்தை மதிப்பவர், குரானில் கூறியபடி நடக்க விரும்பியவர், மிகவும் சுறுசுறுப்பானவர், தீயபழக்கம் இல்லாதவர், சாதாரண குடிமகன் போல் வாழ விரும்பியவர், தன் குல்லாவை தானே தைத்து போர்த்தியவர், தான் சார்ந்த மதத்தில், மிகுந்த பக்தியுடையவர், குடிப்பழக்கத்தை தடை செய்தவர். மது உற்பத்தியை நிறுத்த ஆணையிட்டவர், ஆடம்பரம் இல்லாதவர், மக்களை நல்வழிப்படுத்த மனமகிழ்ந்து செயல்பட்டவர்.

**வாரிசுரிமைப் போர் (ஷாஜஹானின் இறுதி காலம்)**

ஷாஜஹானுக்கு நான்கு மகன்கள் இருந்தனர். தாராஷிகோ, ஷூஜா, ஔரங்கசீப், மூரத் ஆகிய இவர்கள் அனைவரும் அழகி மும்தாஜின் பிள்ளைகள். ஒவ்வொருவரும் பேரரசின் ஒவ்வொரு பகுதிக்கு ஆளநராக இருந்தவர்கள். ஆட்சியை கைப்பற்ற ஒவ்வொருவரும் ஆசைக் கொண்டனர். 1657 - ல் ஷாஜஹான் உடல்நிலை மோசமானதும் தாராவை தம்முடைய வாரிசாக ஷாஜஹான் நியமித்தார். இதனை அறிந்த மற்ற இளவரசர்கள் ஆத்திரமும், அதிருப்தியும் கொண்டனர். ஔரங்கசீப் சரியான காரியவாதி, ஔரங்கசீக் தனது ஆதரவை மூரத்திற்கு அளிப்பதாக கூறினார்.

ஷீஜா தனது தந்தையை எதிர்தது ஒரு படையெடுப்பை நடத்தினார். இப்போர் பகதூர்பூர் அருகில் நடைபெற்றது. ஷாஜஹானுக்கு ஆதரவாக தாராவின் படைகள் போர் செய்ததால் ஷீஜாவின் படை தோற்கடிக்கப்பட்டது. மூரத், ஔரங்கசீப் படைகள் உஜ்ஜயினுக்கு அருகிலுள்ள

தர்மத் என்ற இடத்தில் முகாமிட்டிருந்தது. இதை அறிந்த தாரா காசிம்கான் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இப்போரில் ஔரங்கசீப்பின் படைகள் வெற்றி பெற்றது. ஔரங்கசீப்பின் பெருமை உயர்ந்தது. படைவலிமை அதிகமானது. பின்னர் சமூகார்க் என்ற இடத்தில் ஏற்பட்ட போரில் தாராவின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

ஔரங்கசீப் தரைப்படைகளை பெருமிதத்துடன் ஆக்ராவிற்கு அனுப்பி தனது தந்தை ஷாஜஹானை சிறைப்படுத்தினார். 1666 ஜனவரி 22 - ல் ஷாஜஹான் காலமானார். மூரத்தும், ஔரங்கசீப்பும் இணைந்தே தாராவை தோற்கடித்தனர். அவ்வெற்றியை கொண்டாட ஔரங்கசீப் மூரத்திற்கு ஒரு பெரும் விருந்து வைத்தார். தாராவிற்கு அளவு கடந்த மது கொடுக்கப்பட்டது. சுய நினைவு இழந்தார் மீண்டும் சுயநினைவு திரும்பிய போது, அவர் சிறையில் இருப்பதை உணர்ந்தார். அவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு 1661 - ல் டிசம்பர் 4 - ம் நாள் கொலைச் செய்யப்பட்டார். அதனால் மொகலாயர்களின் ஆட்சி ஔரங்கசீப் கைக்கு வந்தது.

**ஔரங்கசீப் வடமேற்கு கொள்கை**

யூசுப்சாய்கள் கலகம் (1667)

1667 - ல் பாகு என்பவரின் தலைமையில் யூசுப்சாய்கள் கிளர்ந்தெழுந்தனர். யூசுப்கான் பெஷாவரை தாக்க முயலுவதை அறிந்த ஔரங்கசீப் 10000 (பத்தாயிரம்) படைவீரர்களை அமீர்கான் தலைமையில் அனுப்பினார். 1671 - ல் இராஜபுத்திர தளபதியான ஜஸ்வந்த்சிங் அப்பகுதியில் கண்காணிப்பாளராக ஔரங்கசீப்பால் நியமிக்கப்பட்டார்.

**ஆப்ரிடிகளின் கலகம் 1672**

1672 - ல் அக்மலகான் தலைமையில் ஆப்ரிடிகள் கிளர்த்தெழுந்தனர். அக்மல்கான் தன்னை மன்னரென முடிசூட்டிக் கொண்டு ஷியா பிரிவு மக்களாகிய பட்டானியர்களை தன் பக்கம் சேர்த்துக் கொண்டு மொகலாயர்களை எதிர்த்தார். காபூல் ஆளுநரான அமின்கான் தலைமையில் நடந்த போரில் அமின்கான் தோற்கடிக்கப்பட்டார். 10000 - க்கும் அத்கமானோர் கொல்லப்பட்டனர். 2000 - க்கும் அதிகமானோர் அடிமைகளாக்கப்பட்டு மத்திய ஆசியா அனுப்பப்பட்டனர்.

**கட்டாக் புரட்சி**

ஆப்ரிடிகளின் வெற்றி, பெஷாவர், பன்னு, கேஸத் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த கட்டாக் இனத்தவரையும் புரட்சி செய்யத் தூண்டியது. இப்புரட்சி மொகலாயர்களால் அடக்கப்பட்டது.

**ஔரங்கசீப்பின் வடகிழக்கு எல்லைப்புற கொள்கை**

**குச் பகுதியை கைப்பற்றுதல**

வடகிழக்கு எல்லையில் அஹோம்கள் என்ற முரட்டு இனத்தவர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பர்மாவிலிருந்து அஸ்ஸாம் வந்த மங்கோலிய இனத்தவர் மொகலாயர்களின் வாரிசுரிமைப் போர் நடைபெற்ற பொழுது குச் மன்னன் இப்பொழுது அஸ்ஸாமின் தலைநகர்) சூறையாடி கைப்பற்றினார். இதை அறிந்த ஔரங்கசீப் குச் மன்னனை அடக்க ஒரு

பெரும்படையை அனுப்பினார். இப்படை மன்னனை தோற்கடித்து குச் பகுதியை கைப்பற்றியது. அங்கிருந்த இந்து கோயில்கள் இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டன.

**கடற் கொள்ளைக்காரத்களுடன் ஷெயிஸ்டகான்**

ஔரங்கசீப் தனது மாமன் ஷெயிஸ்ட் கானை வங்காளத்தில் ஆளுநராக நியமித்தார். அரக்கான் பகுதியில் போர்த்துக்கீசியர்கள் கடற்கொள்ளையில் இறங்கினார். கடற்கொள்ளையின் தலைமை இடமான சிட்ட காங்கை அரக்கன் மன்னரிடமிருந்து ஷெயிஸ்ட ஹான் விலைக்கு வாங்கி கொள்ளையை தவிரத்தார். ஔரங்கசீப்பிடம் கடற்படை இல்லாததால் கடலில் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை.

**ஔரங்கசீப்பின் இராஜபுத்திரக் கொள்கை**

ஔரங்கசீப்பின் மூதாதையர்கள் இராஜபுத்திரர்களை நன்மதிப்புடன் நடத்தினார். அதனால் பல நன்மைகள் விளைந்தன. ஆனால் ஔரங்கசீப் காலத்தில் அனைத்தும் தலைகீழானது. இராஜபுத்திரர்களை கொடிய விரோதியாக ஔரங்கசீப் நடத்தினார். 176 - ல் ஜஸ்வந்த் சிங் (இராஜபுத்திரன்) காலமானதும் ஔரங்கசீப் படைகள் மார்வாரைக் கைப்பற்றியது. மார்வார், ஜோத்பூர் ஆகிய பகுதிகளில் இருந்த இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டன. இந்துக்களின் மீது ஜிஸியா வரி விதிக்கப்பட்டது. ஜஸ்வந்த்சிங்கின் மனைவி இராணிக்கு அஜித்சிங் என்ற குழந்தை பிறந்தது. தாயையும், சேயையும் (குழந்தை) ஔரங்கசீப் டெல்லிக்கு அழைத்தார். அவர்கள் சென்றனர். உடனே ரத்தர்கள் அஜித்சிங்கை ஜஸ்வந்தின் வாரிசாக நியமிக்க வேண்டும் என்று ஔரங்கசீப்பிடம் வேண்டினர். ஔரங்கசீப் மறுத்தார். உடனே ரத்தர்களில் சிலர் மாறுவேடத்தில் சென்று இராணியையும், அவளது மகன் அஜித் சிங்கையும் அழைத்து வந்து அபுமலையில் தங்க வைத்தனர். மறைந்திருந்த இராணி ராணாவின் உதவியை நாடினார். இராஜபுத்திரர்கள் ஒருங்கிணைத்து ஔரங்கசீப் எதிர்த்தனர்.

ஔரங்கசீப் தனது மகன் அக்பர் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இப்படை மார்வாரை கைப்பற்றியது. ஆரவல்லி மலைப் பகுதியில் இருந்த ராணா ராஜ்சிங் அக்பரை கடுமையாக எதிர்த்தார். இந்நேரத்தில் ஔரங்கசீப் ஆசும் என்பவரை தனது மகனுக்கு பதிலாக நியமித்து அக்பரை திரும்ப அழைத்தார். இதனால் அவமானப்பட்ட அக்பர் இராஜபுத்திரர்களுடன் சேர்ந்து கொண்டு தாமே இனி மொகலாய பேரரசர் என்று முடிசூட்டிக் கொண்டார். ஔரங்கசீப்பின் படைவலிமைளை அறிந்த மேவார் ராணா 1681ல் ஔரங்கசீப்புடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். அதன்படி ஜிஸியா வரி வாங்குவதில்லை என்றும், ராணாவின் நாட்டை அவருக்கே திருப்பித் தரவும் உறுதி கூறப்பட்டது. ஔரங்கசீப்பின் இராஜபுத்திரக் கொள்கை மொகலாயரின் பெருமையை குறைத்தது. பொருள் நட்டத்தை ஏற்படுத்தியது. மொகலாயரின் மதிப்பும், உயர்வும் குறைந்தது.

**ஔரங்கசீப்பின் தக்காண கொள்கை**

தக்காணத்தை ஷியாப்பிரிவு முஸ்லீம்கள் ஆண்டு வந்தனர். ஔரங்கசீப் முஸ்லீமில் ஒரு பிரிவாகிய சன்னி பிரிவை சார்ந்தவர். அதனால் ஷியாப்பிரிவின் வளர்ச்சியை ஒடுக்க நினைத்தார். தக்காணத்தில் எழுச்சியுற்ற சிவாஜியை ஒடுக்கவும், சன்னிப்பிரிவின் சமயத்தை

பரப்பவும் தக்காண படையெடுப்பில் ஔரங்கசீப் ஆர்வம் காட்டினார். இது முகலாயப் பேரரசு வீழ்ச்சியுற முக்கிய காரணமாக அமைந்தது.

**பிஜப்பூர் படையெடுப்பு 1685**

இரண்டாம் அடில்ஷா பிஜப்பூரை ஆட்சி செய்து வந்தார். இரண்டாம் அடில்ஷா முஸ்லீமின் மற்றொரு பிரிவாகிய ஷியா பிரிவை சார்ந்தவர். அவழ சேருமாறு ஔரங்கசீப் கட்டாயப்படுத்தினார். அதற்கு அவர் மறுக்கவே அவர் மீது ஔரங்கசீப் படையெடுத்தார். 15 மாதங்கள் நடந்த போரில் பிஜப்பூர் சுல்தான் கைது செய்யப்பட்டு தௌலதாபாத் சிறையில் வைக்கப்பட்டார். 1686ல் பிஜப்பூர் மொகலாய பேரரசுடன் இணைக்கப்பட்டது.

**கோல்கொண்டா படையெடுப்பு - 1687**

கோல்கொண்டா சுல்தான் அப்துல்ஹாசன் ஷியாப் பிரிவைச் சார்ந்த முஸ்லீம் ஆவர். அவரையும் சன்னிப் பிரிவில் சேர ஔரங்கசீப் கட்டாயப்படுத்தினார். ஔரங்கசீப் படையெடுத்தால் பல நஷ்டங்கள் ஏற்படும் என்று எண்ணி கோல்கொண்டா சுல்தான் அப்துல்ஹாசன் இளவரசருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு மொகலாயர்களின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டார். அதன்படி ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாய் நஷ்ட ஈட்டு தொகையும், ஒவ்வொரு ஆண்டும் இரண்டு லட்சம் ஹான் (நாணயத்தின் பெயர்) நாணயங்கள் தருவதாக கோல்கொண்டா சுல்தான் ஒத்துக் கொண்டார். அதோடு மால்கட், சிரம் ஆகிய கோட்டைகளையும் தருவதாக ஒப்புக் கொண்டார்.

இந்த உடன்பாட்டை ஏற்காத ஔரங்கசீப் 1687 - ல் கோல்கொண்டாவை முற்றுகையிட்டார். இம்முற்றுகை எட்டு மாத காலம் நீடித்தது. இறுதியில் கோல்கொண்டா கோட்டையும், ஏழு கோடி ரூபாயும் கணக்கற்ற தங்கமும் ஔரங்கசீப்பிற்கு கிடைத்தது. கோல்கொண்டவின் வீழ்ச்சிக்குப்பின் அதோனி, கர்நூல், ரெய்சூர், பெங்களூர், பெல்காம், காசி ஆகிய கோட்டைகளும் ஔரங்கசீப்பால் கைப்பற்றப்பட்டன.

**சிவாஜியை அடக்க முடியாமை (1663)**

மாராட்டியப் பகுதியை ஆண்டு வந்த சிவாஜியை ஔரங்கசீப்பால் அடக்க முடியவில்லை . 1663 -ல் கல்கத்தாவிலிருந்து ஷிெயஸ்டகானை ஔரங்கசீப் அழைத்தார். ஷெயிஸ்டகானை தக்காணத்தின் பொறுப்பாளராக நியமித்து, சிவாஜியை தாக்க ஆணையிட்டார். ஷெயிஸ்டகானும் அவரது படைகளும் பூனா கோட்டையை பிடித்தனர். அன்றிரவு அங்கேயே தங்கினார். இரவோடு இரவாக சிவாஜியும் அவருடன் 200 வீரர்களும் மாறுவேடமிட்டு பூனா கோட்டைக்குள் நுழைந்து மொகலாய வீரர்களை கொன்று குவித்தனர். ஷெயிஸ்டகான் தப்பி ஓட நினைத்த நேரத்தில் சிவாஜி வீசிய கத்தி ஒன்று அவரது கட்டை விரலை துண்டாக்கியது. ஷெயிஸ்டகான் தப்பி ஓடி விட்டார். அவனது மகன் அப்துல் பாத்தா (யுடினரட குயவயா)வும் கொல்லப்பட்டார். ஒரு சில மொகலாயர்கள் பதறி ஓடி தப்பித்தனர். இதனால் சிவாஜியின் புகழ் மராத்திய பகுதியில் ஓங்கியது. மேலும் மொகலாயர்களுக்கு சொந்தமான பல பலகோட்டைகளையும் மாராட்டியர்கள் பிடித்தனர்.

**புரந்தர் உடன்படிக்கை**

மோகலாய படை ஒன்றிற்கு தலைமை தாங்க வந்த ஜெய்சிங் சிவாஜிக்கு ஆசை வார்த்தை காட்டி புரந்தர் என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கைக்கு பிறகு சிவாஜியை ஆக்ராவிற்கு வரும்படி வஞ்சக அழைப்பு ஒன்றை ஜெய்சிங் விடுத்தார். ஜெய்சிங்கை நம்பி சிவாஜியும் அவரது மகன் சம்பாஜியும் ஆக்ரா சென்றனர். அங்கே ஔரங்கசீப்பால் சிறை வைக்கப்பட்டார். பின் ஒரு ஆரஞ்சு பழக்கூடை வழியாக சிவாஜியும் சம்பாஜியும் தப்பி ரெய்காரை வந்தடைந்தனர். மராத்தியர்கள் மொகலாயருக்கு சொந்தமான பல கோட்டைகளை முற்றுகையில் ஆரம்பித்தனர். ஔரங்கசீப்பின் தக்காண படையெடுப்பால் பெரும் பொருட் சேதம், உயிர் சேதம் ஏற்பட்டது. மொகலாய படைகள் அச்சத்தோடு இருந்தனர். ஊழல் பெருகியது. வெறுப்பு வளர்ந்தது, மராத்தியர்களின் திடமான செயலுக்கு முன் மொகலாயர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

## 4. Mughal Administration

முகலாயரின் ஆட்சி முறை (MUGHAL ADMINISTRATION) ஒரு சிறந்த ஆட்சி முறையை இந்தியாவில் நிறுவியதற்கானப் பெருமை அக்பருக்கே உரியதாகும். பாபருக்கு உள்நாட்டு ஆட்சி முறையைப் பலப்படுத்த கால அவகாசம் இல்லை. ஹுமாயூனுக்கு அதைச் செய்வவதற்கு திறமையில்லை. மிக உயர்ந்த அரசியல் மேதையான அக்பர், முகலாய ஆட்சி முறையை ஒழுங்குபடுத்தினார். அவரது ஆட்சிமுறை இந்தியப் பின்னணியில் அமைந்த பாரசீக அராபிய முறையாகும். எனவே முகலாய ஆட்சி முறை என்பது அக்பரின் ஆட்சிமுறையே ஆகும். முகலாயர்களின் ஆட்சி முறையைப் பற்றி அறிவதற்கு அபுல்பாசல் எழுதிய அயினி' அக்பரி முதாமத்கான் எழுதிய 'இக்பால் நாமா ஜஹாங்கிரி', நிஜாம் உதின் எழுதிய துசுக்கி ஜஹாங்கிரி ஆகிய நூல்களும், வெளிநாட்டினர்களான சர்தாமஸ்ரோ, பெர்னியர், ஹாக்கின்ஸ், மானுக்கி, டெர்ரி ஆகியோரின் பயணக் கட்டுரைகளும் முகலாய ஆட்சி முறையைப் பற்றி அறிந்துகொள்ள உதவுகின்றன. முகலாயரின் ஆட்சி முறையின் முக்கிய அம்சங்கள் விரிவாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**1. அரசர் (King) :**

முகலாய ஆட்சிமுறையில் அரசரே அரசியல், சமயம் ஆகியவற்றின் தலைவராக இருந்தார். எல்லா அதிகாரங்களும் அவரிடத்தில் குவிக்கப்பட்டிருந்தது. அரசரின் அதிகாரம் அளவில்லாதது. சட்டம் பெரும்பாலும் அவர் வாய்ச்சொல்லோயாகும். அவருடைய விருப்பத்தை எவரும் மறுத்துக் கூற முடியாது. அவரே கடவுளின் கலிஃபா. இஸ்லாமிய மரபுகளையும், இஸ்லாமிய வேத நூல்களையும் அனுசரித்து அவற்றின் விதிகளுக்கு அவர் உடன்பட்டு நடக்க வேண்டும் (அக்பர் இதற்கு விதிவிலக்கு. அமைச்சர்களின் ஆலோசனையை ஏற்றுக் - கொள்வதோ அல்லது தட்டிக் கழிப்பதோ எல்லாம் அரசனின் விருப்பத்தைப் பொறுத்தது.

தினமும் மக்களுக்கும் அரசர் தரிசனம் கொடுப்பார். அதற்கு ஐரோகாதரிசனம்' (Jharokho-I-Darshan) என்று பெயர். இந்தியாவில் முதல் ஆறு முகலாய அரசர்கள் நல்ல பொது அறிவும் ஆற்றலும் படைத்திருந்தனர். அரசர் எங்காவது பயணம் மேற்கொண்டால் அதனைப் பிரகடனப்படுத்தும் பொருட்டு நகரா' (Naggara) என்ற முரசுகளை முழங்குவர். முகலாயப் பேரரசர்கள் சரியான வாரிசுரிமைக் கொள்கைகளைப் பின்பற்றவில்லை. எனவே பல

வாரிசுரிமைப் போர்கள் ஏற்பட்டது. முகலாய அரசர்கள் தங்கள் பேரரசின் அடித்தளமாக படைபலத்தையே வைத்துக்கொண்டதால் அவர்கள் ஆட்சி வல்லாட்சியாகவே விளங்கியது.

**2 மத்திய அரசு நிர்வாகம் :**

நிர்வாகம் நடைபெறுவதற்காக மத்திய ஆட்சிமுறை பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இத்துறைகளைக் கவனிப்பதற்காக பல அதிகாரிகளை பேரரசர் நியமித்தார்.

**திவான் அல்லது வாசிர் (Diwan or Wazir):** இவர்தான் அரசாங்கத்தின் மிக உயர்ந்த அதிகாரியாவார். அரசருக்கும், அதிகாரிகட்குமிடையே ஓர் இணைப்பு பாலமாகச் செயல்பட்டார். நிதித்துறை இவர் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

**மீர் பகஷி (Mir Bakshi):** இவர் பல வேலைகளைக் கவனித்து வந்தார். முக்கியமாக அரசாங்க அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுக்கும் பொறுப்பு இவருடையது ஆகும். படைக்கு ஆள் திரட்டுதல், உயர் அதிகாரிகளின் பெயர் பட்டியல் தயாரித்தல், போர் நடைபெறும் முன்பு படை வீரர்கள் முழுப் பெயர்ப்பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தார்.

**தலைமைக்காஸி (Chief Quiz):** மன்னருக்கு அடுத்தபடியாக நீதித்துறையின் தலைமை நீதிபதியாக பொறுப்பு ஏற்றிருந்தார்.

**கானிசாமன் (Khan- | Saman):** இவர் அரச குடும்பத்தின் தேவைகளைக் கவனித்து வந்தார். அதாவது அரண்மனைத் துறைத் தலைவர் ஆவார்.

**முஹ்தசீப் (Muhtasib):** இவரது தலைமையில் பொது ஒழுக்கக் கட்டுப்பாட்டுத் துறை அமைக்கப்பட்டிருந்தது. பொது மக்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பதே இவர் வேலை. நபிகள் நாயகத்தின் ஒழுக்க விதிகளை நாட்டு மக்கள் பின்பற்றுமாறு கவனித்துக்கொண்டார்.

**தலைமை சதர் (Chief Sadr):** இவர் சமயம் மற்றும் அறநிலைய அமைச்சர் ஆவார். இஸ்லாமியக் கோட்பாடுகளின் பாதுகாவலர் இவரே!

**தரோகாதாக் சௌகி (Duroga Dag Chauki):** இவர் தபால் போக்குவரத்து மற்றும் உளவுத் துறை தலைவராவார்.

இவர்கள் தவிர நாணயசாலைத் தலைவர், தணிக்கைத் துறை அதிகாரி, அரசாங்க தொழிற்சாலை கண்காணிப்பாளர், செய்தி கொண்டு வந்து தரும் செயலர் ஆகிய பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**மாநில அரசு நிர்வாகம்:**

முகலாயப் பேரரசு பரந்ததாக இருந்ததனால் அது பல மாநிலங்களாகப் (Sulas) பிரிக்கப்பட்டிருந்தது. அக்பர் தனது பேரரசை பன்னிரெண்டு மாநிலங்களாகப் பிரித்திருந்தார். ஔரங்கசீப் காலத்தில் இது 21 ஆக உயர்ந்தது. மாநில ஆட்சி முறையை மய அரசின் மாதிரியாகவே இருந்தது. இந்த மாநிலங்கள் சுபா என்றழைக்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் சுபேதார் எனப்பட்ட மாநில ஆளுநர் நியமிக்கப்பட்டார். சட்டம், அமைதி, நீதி, பாதுகாப்பு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றிருந்தார். போர்க் காலங்களில் பேரரசருக்குத் துணையாக செல்ல வேண்டியது இவரது கடமையாகும். இவர் கீழ் இருந்த திவான் ஊரியல்

மற்றும் வருவாய்த் துறையின் தலைவராவார். இவர் மைய அரசுக்கு மட்டுமே பொறுவப்பானவர். 'பக்ஷி' என்பவர் மாநில அளவில் படை வீரர்களைச் சேர்த்தல், பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டார். கொத்தவால் (Kotwal) என்பவர் முக்கிய நகரங்களில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டினார். சமூக விரோத சக்திகளை அழிப்பது இவரது கடமையாகும். இவர்கள் தவிர சதர், அமில், பிதிக்ஸி, போட்தார் போன்ற அதிகாரிகளும் இருந்தனர்.

மாவட்டங்கள் சர்க்கார்கள் என்றழைக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டங்களும் பர்கானாக்கள் என்ற வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நிர்வாக அமைப்பின் கீழ் நிலையான ஊர்களின் நிர்வாகத்தை ஊராட்சி மன்றங்கள் கவனித்து வந்தன.

**சட்டமும் நீதியும் :**

முகலாயர் காலத்தில் சட்டமென்பது ஒன்று இருக்கவில்லை. எழுதி வைக்கப்பட்ட சட்டமுறைகளும் கிடையாது. சமயம் சார்ந்த சட்டங்களே நீதித் துறையின் அடிப்படையாக அமைந்தன. ஜஹாங்கீர் காலத்தில் 12 கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. ஔரங்கசீப்பின் காலத்தில் முஸ்லீம் சட்டத்தின் சாரமான ஃபாத்வா - இ - ஆலம்கிரி (Fatva-l-Alamgiri) ஒன்று தயாரிக்கப்பட்டது. நீதிபதிகள் குர்ரானின் கட்டளைகள், பாத்வாக்கள் அல்லது மிகச் சிறந்த ஜுரிகளினால் மதச்சட்டத்திற்கு கொடுக்கப்பட்ட விளக்கங்கள், கானுக்கள் அல்லது பேரரர்களின் ஆணைகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் தீர்ப்புகளைக் கூறினார்.

முகலாய அரசர்கள் விரைவாக நீதி வழங்குவதை தங்கள் முக்கியக் கடமையாகக் கருதினர். அரசரே முக்கிய வழக்குகளைத் தீர்மானித்தார். நீதி வழுவாதவர் எனப் புகழ் பெற்றவர் ஜஹாங்கீர். மக்கள் நீதி வேண்டி மன்னரை அணுக காலத்தடை ஏற்படாதிருக்க யமுனை நதிக்கரையில் எழுப்பப்பட்ட ஓர் கற்றூணுக்கும் ஆக்ரா கோட்டைக்குமிடையே நீதிச் சங்கிலி' ஒன்றைக் கட்டிவைத்தார். சங்கிலி இழுக்கப்பட்டதும் எழும் மணியோசையைக் கொண்டு நீதிநாடி வருவோரின் நிலையைப் புரிந்துகொள்ளும் மன்னர், உடனடியாக நீதி கிடைக்க ஏற்பாடு செய்வார். பொதுவாக நீதி வழங்குவதில் மன்னர்கள் நடுநிலையுடன் செயல்பட்டனர். மீர் அர்ஸ் (Mir-Arz) என்ற நீதிபதிகள் பொதுமக்களின் வழக்குகளைப் பெற்று அரசரிடம் சமர்ப்பிப்பர். மன்னருக்கு அடுத்தபடியாக தலைமை நீதிபதியாக இருந்தவர் காஸி உல் காசாத் (Qaz--ul-Qazat) ஆவார். அனைத்து முறையீட்டு வழக்குகளையும் இவர் விசாரிப்பார். மாகாண தலைநகரங்களில் நீதிபதியாக இருந்தவர் காஸி. காஸிகள் நேர்மையாகவும், நீதியாகவும், ஒரு சார்பின்றியும் இருக்க வேண்டும் என்றும், பொது மக்களின் விருந்து மற்றும் விழாக்களில் கலந்துகொள்ளக்கூடாது என்றும் எதிர்பார்க்கப்பட்டது. முஃப்திகள் (Muftis) முஸ்லீம் சட்டங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

நகர, மாநில நீதிமன்றங்களுக்குப் முகலாயப் பேரரசரே தலைவராக இருந்தார். பேரரசரே நீதியின் ஊற்றாகவும், கடைசி முறையீட்டு மன்றமாகவும் விளங்கினார்.

**நில வருவாய்த் துறை அமைப்பு:**

முகலாயர்கள் காலத்தில் விவசாயம் அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக இருந்தது. எனவே விவசாயத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. நிலச் சீர்திருத்தங்களில் ஷெர்ஷா

பல முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தார். மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நில வரியில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். அவை, விளைபொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவது, உழுபவர்களின் வாழ்க்கைத் திறனை உயர்த்துவது, அரசின் நிலவருவாயைப் பெருக்குவது என்பதாகும். அவர் விவசாயத்தற்குத் தேவையான நிலங்களை பொதுவான அளவு முறையைக் கொண்டு அளந்து அவைகளை உயந்தது, நடுத்தரமானது, மோசமானது என மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். ஒவ்வொரு வகை நிலத்தின் ஆண்டு உற்பத்தி தீர்மானிக்கப்பட்டது. அதில் 1/3 பங்கு நிலவரியாக நிர்ணயிக்கப்பட்டது. வரியினை விவசாயிகள் பொருளாகவோ, பணமாகவோ செலுத்த அனுமதிக்கப்பட்டனர். இதன் மூலம் விவசாயிகள் இடைத்தரகர்கள் இன்றி நேரடியாகத் தொடர்புகொண்டனர். இதன் மூலம் ஷெர்ஷா மக்களின் அன்பைப் பெற்றார்.

ஆண்டு தோறும் நிலவரி கணக்கிடுவதில் உள்ள கஷ்டங்களையும், அசௌகர்யங்களையும் நீக்கி புதிய நிலச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அக்பர் ராஜா தோடர்மாலை 1582 திவானாக (Diwan-i-Ashraf) நியமித்தார். அவர் பல நில வருவாய் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். தோடர்மால் பத்து ஆண்டு நிலவருவாய் ஒப்பந்தம்' என்ற முறையினைக் கொண்டு வந்தார். இதன்படி அக்பர் ஆட்சியின் 15-ஆவது ஆண்டு முதல் 24-ஆவது ஆண்டுகளுக்கு இடையே உள்ள பத்து ஆண்டுகளின் சராசரி வருவாயைக் கணக்கில் கொண்டு ஆண்டுகளுக்கு தொடர்ந்து ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய நிலவரி நிர்ணயிக்கப்பட்டது. இத் திட்டம் முதலில் அலகாபாத், ஆக்ரா, ஆஜ்மீர், மாளவம், டெல்லி, லாகூர் மற்றும் மூல்தான் ஆகிய எட்டு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் விவசாயத்திற்குத் தகுதியான நிலங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன. அவை:

1) ஆண்டு தோறும் பயிரிடக்கூடிய நிலம் (போலாஜ் - Polaji),
2) விளைச்சல் சக்தியை மீண்டும் பெறுவதற்காக உழுது விதைக்காமல் சிறிது காலம் விட்டு வைக்கப்படும் நிலம் (பிரளதி - Parauti),
3) மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் உழுது விதைக்கப்படாமல் விட்டுவிடும் நிலம் (சச்சர் - Chachar),
4) ஐந்தாண்டுகள் அல்லது அவற்றிற்கு மேலும் பயிரிடப்படாத நிலம் (பாஞ்சார் - Banjar) ஆகியவையாகும்.

பல வகையான பயிர்கள், அதன் பல வகையான நிலப் பிரிவுகள் ஆகியவையின் சராசரி வருமானத்தில் 1/3 பகுதி நிலவரியாகத் தீர்மானிக்கப்பட்டது. விவசாயிகள் வரியை விளைபொருளாகச் செலுத்த அனுமதிக்கப்பட்டனர். வரிகளைப் போதுமான கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் வசூலிக்க வேண்டுமென்றும் விளைச்சலில்லாத காலத்தில் அதட்டிக் கேட்கக்கூடாது என்றும் அரசர்கள் வரிவசூல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தனர். வறட்சி மற்றும் பஞ்ச காலங்களில் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டது. விவசாயிகட்கு தக்காவி கடன் வழங்கப்பட்டு அவர்கள் துயரங்கள் நீக்கப்பட்டன. விளை நிலங்கள், மற்றும் தரிசு நிலங்களில் அதிக உற்பத்தி செய்யும் விவசாயிகட்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு வருவாய்த்

துறை அமைப்பு முகலாயர் காலத்தில் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டு நல்ல முறையில் இயங்கி வந்தது.

**படை அமைப்பு: (மான்சப்தாரி முறை)**

முகலாயப் பேரரசு படை வலிமை என்ற அடித்தளத்தில் அமைக்கப்பட்டது என்பதால் பேரரசர்கள் படை அமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். அக்பர் இராணுவத்தினைச் சீர்திருத்தம் செய்வதை தனது முதல் பணியாக மேற்கொண்டார். 1570-ல் அவர் மன்சப்தாரி ' திட்டத்தினை வெளியிட்டார். அனைத்து இராணுவ அமைப்புகளும் மன்சப்தாரி திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. மன்சப்' என்ற சொல் அரேபிய மொழியிலிருந்து வந்ததாகும். இது பதவி, கௌரவம் ஆகியவற்றைக் குறிப்பது ஆகும். எனவே மன்சப்தார்' என்பது அரசின் ஒரு பதவியினையோ அல்லது அதிகாரத்தையோ குறிப்பதாகும். மன்சப்தார்களை நியமிக்கும் அதிகாரம் அரசரிடமே இருந்தது.

முகலாயப் பேரரசில் 66 வகையான மான்சப்தார் பதவி நிலைகள் இருந்தாலும், 33 முறைகள்தான் செயல்முறையில் காணப்பட்டன. 10 முதல் இருபது வீரர்களைக் கொண்ட கீழ்நிலை மான்சப்தாரிலிருந்து 5000 வீரர்களைக் கொண்ட மன்சப்தார் வரை நிலைகள் உயர்ந்து இருந்தன. 5000 வீரர்களுக்கு மேற்பட்ட மான்சப் பதவிகள் அரசால் கௌரவம் அளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் இளவரசர்களுக்கும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மான்சப்தாரும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரைகள், யானைகள் மற்றும் வீரர்களை தங்கள் தரத்தற்கு ஏற்ப வைத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மான்சப் பிரபுக்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட அளவு ஆட்களை படையில் சேர்த்திருக்க வேண்டும் என்பதற்காக, ஒருவருக்கொருவர் ஆட்களைக் கடன் கொடுத்து வந்தனர். தெருவில் சுற்றித் திரியும் சோம்பேறிகளையும் சேர்த்தனர். எனவே, அக்பர் காலத்தில் மான்சப்தார் படை வீரர் பற்றிய விளக்கப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்த மான்சப்தாரிகள் தவிர தாக்கிலிஸ், அகாடிஸ் (Dalchilis, Ahadis) வேறு இருவகையான பிரிவுகளும் இருந்தன. தாக்கிலிஸ் என்பது மான்சப்தார்கள் அதிகாரத்தன் கீழ் வைக்கப்பட்டு அரசாங்கத்தால் சம்பளம் கொடுக்கப்பட்ட துணைத் துருப்புகள் ஆகும். அகாடிஸ் என்பது அக்பர் தனது பேரரசில் நேரிடையாக தனது மெய்க்காப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்ட ஓர் தனிப் பிரிவு ஆகும். இந்த அகாடிஸ் வீரர்கள் சாதாரண வீரர்களைவிட நல்ல ஊதியம் பெற்றார்கள்.

முகலாயப் படை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, கடற்படை ஆகியவையாகும். வலிமை மிக்க கடற்படை ஒன்றை முகலாயர்கள் அமைக்கவில்லை. முகலாயப்படை சக்தி வாய்ந்ததாக இருப்பினும், அதில் பல குறைகள் இருந்தன. முகலாயப் படை ஒரு தேசியப்படையாக இருக்கவில்லை. காரணம் மான்சப்தார்களுக்கு தனது விருப்பம் போல் போர் வீரர்களை தேர்வு செய்ய உரிமை வழங்கப்பட்டதால், தங்கள் பகுதி, தங்கள் இனம், தங்கள் மதத்தைச் சேர்ந்தவர்களையே இராணுவத்தற்குத் தேர்வு செய்தனர். எனவே முகலாய இராணுவம், ஒரே மாதிரியான அமைப்பாக இல்லை. போர் வீரர்கள் தங்களது மான்சப்தார்களையே பேரரசராகக் கருதினார்கள். பேரரசர்களைவிட தங்கள் படைத்தலைவரிடமே அதிக விசுவாசம் காண்பித்தார்கள். போர் வீரர்களுக்கான ஊதியத்தை அரசாங்கம் மன்சப்தார் மூலமே

வழங்கியதால் மான்சப்தார்கள் போலியான வருகைக் கணக்கை காண்பித்து அரசை ஏமாற்றினர். இவ்வாறு மான்சப்தாரி திட்டம் வெற்றியடையவில்லை. எனவே முகலாயப் படை அதிக எண்ணிக்கை கொண்டதும், நல்ல பயிற்சி இல்லாததும், நவீன போர்க்கருவிகள் இல்லாததுமாகவே காணப்பட்டது. முகலாயக் குதிரைப் படையில் தாக்கோ மஹல்லி (Dag-O-Mahalli) அல்லது தாக்' என அழைக்கப்படும் குதிரைகளுக்கு குறியிடும் வழக்கம் மீண்டும் கொண்டுவரப்பட்டது.